**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.1242/2022**
**வழக்கு சாட்சி D.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சரவணசாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : செல்லப்பகவுண்டர் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : நாகப்பன்பட்டி | வயது | : சுமார் 51 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 14.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் ? 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் என்ன விபரங்கள் சொல்லி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? விபரங்கள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் என்ன விபரங்கள் கூறியுள்ளேன் என்று எனக்கு தெரியுமா என்றால் ? தெரியும். எதிர்வழக்குரையில் சொல்லப்படாத சங்கதிகளை முதன்மை சாட்சிய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றாலும், அந்த சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றாலும் ? தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எனது தரப்பு சான்றாவணங்களில் 10வது ஆவணமாக சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு நகல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? ஆமாம். தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பி.வா.சா.ஆ-10 ஆவணமான நீதிப்பேராணையில் எனது பெயர் உள்ளதா என்றால் ? எனது பெயர் இல்லை. மேற்படி உத்தரவு நகல் அசல் உத்தரவு நகல் என்றால் ? சரிதான். மேற்படி உத்தரவு நகலானது சாமியப்பன் என்பவர் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் ? ஆமாம். பி.வா.சா.ஆ.10 உத்தரவு நகலானது எனக்கு எப்படி கிடைத்தது என்றால் ?

திருமலைசாமி என்பவரிடமிருந்து நான் கிரையம் வாங்கிய பிறகு உட்பிரிவு செய்வதற்காக சென்ற போது எதிர்வாதி உட்பிரிவு செய்யக்கூடாது என்று ஆட்சேபனை மனு கொடுத்தார். அந்த சமயத்தில் எனக்கு சொத்தினை விற்ற நபரான திருமலைசாமி என்பவர் நீதிமன்ற உத்தரவை எனக்கு கொடுத்தார். பி.வா.சா.ஆ–10 ஆவணத்தில் திருமலைசாமி பெயர் இல்லை என்றால் ? இல்லை. நீதிமன்றத்தில் அசல் நகல் வாங்குவதாக இருந்தால் சம்மந்தப்பட்ட தரப்பினர்கள் தான் வாங்க இயலும் என்றால் ? சரிதான். பி.வா.சா.ஆ.10 ஆவணத்தை நீதிமன்றத்தில் நகல் வழியாக யார் ஆவணத்தை பெற்றார்கள் என்றால் ? திருமலைசாமியும், சாமியப்பனும் தான் எனக்கு கொடுத்தார்கள். நகலினை திருமலைசாமி, சாமியப்பன் ஆகியோர்களில் யார் வாங்கினார்கள் என்று தெரியாது. பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் என்ன உத்தரவு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் ? கொஞ்சம் தெரியும். இந்த வழக்கின் வழக்கு எண்ணை குறிப்பிட்டு 8 வாரத்திற்குள் வழக்கை முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். மேற்படி உத்தரவில் அ.வ.எண்.909/2022 மற்றும் அ.வ.எண்.1242/2022 என்ற இரண்டு வழக்குகளும் சாமியப்பன் என்பவருக்கும், முத்தம்மாள் என்பவருக்கும் இடையே ஒட்டன்சத்திரம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். சாமியப்பனுக்கும், முத்தம்மாளுக்கும் அ.வ.எண்.1242/2022 என்ற வழக்கு இல்லை என்றால் ? சரிதான். இந்த வழக்கானது முத்தம்மாள் என் மீது தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்திற்கும், சாமியப்பன் என்பவருக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் ? சரிதான். சாமியப்பனுக்கும், வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தம் இல்லாத நிலையில் நானும், சாமியப்பனும் சேர்ந்து உயர்நீதிமன்றத்தில் பொய்யான தகவல் சொல்லி சத்திய பிரமாண வாக்குமூலம் செய்து உயர்நீதிமன்றத்தை ஏமாற்றி இந்த உத்தரவை வாங்கியுள்ளேன் என்றால் ? சரியல்ல. நான் சொல்வது தவறா அல்லது உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு தவறா என்றால் ? அது பற்றி எனக்கு

தெரியவில்லை. உயர்நீதிமன்றத்தில் தவறான தகவல் சொல்லி உயர்நீதிமன்றத்தை ஏமாற்றி உத்தரவு பெற்ற விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும், நான் வழக்கிற்காக வேண்டி எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் 7–வது பக்கத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது இந்த 2–ம் வாதி நிலத்திற்குள் நுழைந்தும், மரங்களை வெட்டியும் அங்கிருந்த விவசாய கலவாட பொருட்களை நாசம் செய்தும், தடுக்க முயன்ற என்னை கொலை மிரட்டல் செய்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் ? ஆமாம். இது சம்மந்தமாக அம்பிளிக்கை காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன் என்றால் ? ஆமாம். அந்த புகார் ரசீதை நான் எனது தரப்பு ஆவணமாக பி.வா.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரிதான். நிலப்பிரச்சனை சம்மந்தமாகவும், பாதை பிரச்சனை இருப்பதாகவும் கண்டு தான் போலீசார் ரசீது கொடுத்துள்ளார்கள் என்றால் ? சரிதான். நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் கை நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணம் என்ன என்றால் ? நகலினை எனது வழக்குரைஞரிடம் கொடுத்திருந்தேன். நான் காவல் நிலையத்தில் புகாரில் கொடுக்கப்பட்ட சங்கதிகள் வேறு என்றாலும், வழக்கில் முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் வேறு என்பதாலும், நான் கொடுத்த புகாரின் கை நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளேன் என்றால் ? சரியல்ல.

(தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.14 17:22:55 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்